(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 124.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011 செத்தெம்பர் 21, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0647/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009 சனவரி முதல் மே மாதம் வரையுள்ள காலப்பகுதியில் இந்நாட்டில் அந்நியச் செலாவணிக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவியதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அந்நியச் செலாவணியை ஈர்ப்பதற்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் பெயர்களையும்,

(ii) அவற்றில் இன்னும் எஞ்சியுள்ள திட்டங்களையும்,

(iii) வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு விசேடமாக 20 சதவீதம் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதையும் அது தொடர்ந்து செயற்படுகிறதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2009 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டு நடுப்பகுதி வரவுசெலவுத் திட்டம் ஆகியவற்றினால் சேமிப்புக்களை ஊக்குவிப்பதற்கு வழங்கப்பட்ட திட்டங்களையும்,

(ii) அப்போது வழங்கப்பட்ட வட்டிவீதங்களையும் தற்போதுள்ள வட்டி வீதங்களையும்,

(iii) மூத்த பிரஜைகளின் சேமிப்புகளுக்கு 20 சதவீத மிகையூதியம் வழங்கப்பட்டதா என்பதையும்,

(iv) அவ்வாறெனில், அது எத்திகதி வரை நடைமுறையிலிருந்து என்பதையும்,

(v) தற்போது மூத்த பிரஜைகளுக்கு எவ்வாறு உதவி வழங்கப்படுகிறது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0977/ '10

2.

கௌரவ எம்.ரீ.ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (6)

(அ) (i) கல்வி அமைச்சினால் குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகளாக இனங்காணப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இப்பாடசாலைகளில் முஸ்லிம் பாடசாலைகள் மற்றும் தோட்டப் பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியே யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளின் வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் தனித்தனியே யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

0982/'10

3\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மின்வலு,எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் பிட்டபெத்தர பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட எத்தாமல எல்லயை மையமாகக் கொண்டு தற்போது மின்சக்தி நிலையக் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்ட நிர்மாணிப்பு தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) இக்கருத்திட்டம் எந்த நிறுவனத்திற்குச் சொந்தமானது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்ட நிர்மாணிப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) சுற்றாடல் சேதம் மற்றும் கருத்திட்ட முன்மொழிவுகள் மீறப்பட்டமை காரணமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை இதன் நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு அறிவித்துள்ளதாவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பொருளாதாரப் பெறுமதியை எதிர்ப்பார்த்து நீர்வீழ்ச்சிகளை அண்டி மேற்கொள்ளப்பட்டுள்ள மின்சக்திக் கருத்திட்டங்களின் விளைவாக பல நிர்வீழ்ச்சிகளை நாம் இழந்துள்ளோம் என்பதையும்;

(ii) எத்தாமல எல்ல கூட அத்தகைய விதிக்கு இரையாகலாம் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1155/ '11

4\.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் மாத்தறை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் அறிக்கையிடப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் 2010 ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2009 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குறித்த எண்ணிக்கைக்கு ஒப்பீட்டளவில் மாற்றம் கண்டுள்ள முறை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தில் டெங்கு நோய் பரவுவதற்கான காரணிகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவை யாவை என்பதையும்;

(iii) சம்பந்தப்பட்ட ஏதுக் காரணிகளை பிரதேசத்தினின்று அகற்றுவதற்கான உத்தேச அல்லது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1268/ '11

5\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— மனிதவள அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக மனிதவள அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1377/ '11

6\.

கௌரவ வசந்த அலுவிஹாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மாத்தளை சிறிமாவோ பண்டாரநாயக்க மாதிரி ஆரம்பப் பாடசாலையுடன் இணைக்கப்பட்டு தற்போது இரண்டாம் நிலைப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதையும்;

(ii) மேற்படி இரண்டாம் நிலைப் பிரிவு தொடர்பாக பெற்றோர் மத்தியில் குழப்பமான நிலைமையொன்று காணப்படுவதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையின் இரண்டாம் நிலைப் பிரிவுக்காக நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடம் தொடர்பான முழுமையான தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் முழுமையாக நிறைவுச் செய்யபப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆரம்ப நிலைப் பிரிவுக்கும் இரண்டாம் நிலைப் பிரிவுக்குமிடையிலான தூரம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) (i) இவ்விரண்டு பிரிவுக்கிடையிலும் நிர்மாணிக்கப்படும் பிரவேசப் பாதையில் பாலம் அமைத்தல், படிக்கட்டுகளை அமைத்தல், மற்றும் பாதைக்கு கொங்கிரீட் இட்டு செப்பனிடல் போன்றவற்றுக்காக செலவுச் செய்யப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி பாதையின் நிர்மாணப் பணிகள் உரிய தரத்தை கொண்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலையின் இரண்டாம்நிலைப் பிரிவை வேறு பெயரில் அழைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அப் பெயர் யாதென்பதையும்;

(iii) இரண்டாம்நிலைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ள இடத்தில் பிள்ளைகளுக்கு போதிய பாதுகாப்பு உண்டா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0658/ '10

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டில் நிதிச்செயற்பாடுகளையும் ஒழுங்கு விதிகளையும் கண்காணிக்கும் அரசாங்க நிறுவனங்களையும்,

(ii) இலங்கை மத்திய வங்கி எப்போது தோற்றுவிக்கப்பட்டது என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2005 முதல் இற்றைவரை வங்குரோத்து நிலையடைந்த நிதிக் கம்பனிகள் வங்குரோத்து நிலமையடைந்தமைக்கான காரணத்தையும்,

(ii) மேற்குறிப்பிட்ட நிதிக் கம்பனிகள் மோசமாகச் செயற்பட்ட பொழுது அவற்றிற்கெதிராக இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) இந்நிதிக் கம்பனிகளினால் செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகையையும்,

(ii) பணம் செலுத்தப்பட்ட வைப்பாளர்களது எண்ணிக்கையையும்,

(iii) அவர்களுக்கு செலுத்தப்பட்ட தொகையையும்,

(iv) மேற்படி காலப்பகுதியில் பணியாற்றிய இலங்கை மத்திய வங்கி ஆளுனரின் பெயர் என்ன என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1157/ '11

8.

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீதிமன்ற தீர்ப்பொன்றின் அடிப்படையில் லங்கா மெரயின் சேர்விஸ் நிறுவனத்தின் பங்குகள் அரசுக்கு கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனம் தற்பொழுது என்ன பெயரில் பேணிவரப்படுகின்றது என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்துக்குச் சொந்தமான பங்குகள் தற்பொழுது வேறு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்:

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்துக்கு வருகை தரும் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்குவதற்காக நிருமாணிக்கப்பட்டு வரும் எண்ணெய்த் தாங்கிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எண்ணெய்த் தாங்கிகளை வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ குத்தகைக்கு வழங்கும் திட்டமேதும் உண்டா என்பதையும்;

(iii) ஆமெனில், குத்தகைக்கு வழங்க எதிர்பார்த்துள்ள நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1206/ '11

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு சட்டவிரோதமாக எடுத்துவருகையில் கைப்பற்றப்பட்ட தங்கத்தின் அளவு 1994ஆம் ஆண்டில் இருந்து இற்றை வரை வருடந்தோறும் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) சட்டவிரோதமாக மேற்படி தங்கத்தை வரவழைத்த ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆட்களிடமிருந்தும் அல்லது நிறுவனங்களிடமிருந்தும் அரசாங்கத்தினால் அறவிடப்பட்ட அபராதத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் சட்டவிரோதமாக எடுத்துச் செல்கையில் கைப்பற்றப்பட்ட தங்கத்தின் அளவு 1994ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை வருடந்தோறும் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) சட்டவிரோதமாக மேற்படி தங்கத்தை எடுத்துச் செல்ல முயற்சி செய்த ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆளிடமிருந்தும் அல்லது நிறுவனத்திடமிருந்தும் அரசாங்கத்தினால் அறவிடப்பட்ட அபராதத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1269/ '11

10.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1378/ '11

11.

கௌரவ வசந்த அலுவிஹாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சீ (C) வகைப் பாடசாலைகளில் அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவையின் தரம் 1 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை நியமிக்கவேண்டும் என்பதையும்;

(ii) அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் அதிபர் சேவையின் தரம் 2ஐச் சேர்ந்த ஒருவரை நியமிக்க வேண்டும் என்பதையும்;

(iii) எனினும், மாத்தளை கல்வி வலயத்தினுள் C வகைப் பாடசாலைகள் சிலவற்றில் அதிபர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஆசிரியர் சேவையில் உள்ளவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) C வகைப் பாடசாலைகளில் அதிபர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஆசிரியர் சேவையில் உள்ள ஒருவர் நியமிக்கப்படுவதை அனுமதிக்கிறீர்களா என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வாறானதொரு நியமனம் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது (அ)(iii) இல் தெரிவிக்கப்பட்டுள்ள நியமனங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) அதிபர் சேவையில் தரம் 1ஐச் சேர்ந்த உத்தியோகத்தரான திருமதி ஆர்.எம். யு. எஸ்.எஸ். ராஜகருணாவுக்கு பாடசாலையொன்றை வழங்காது கல்விக் காரியாலயத்திற்கு இணைக்கப்பட்டுள்ளாரென்பதை அவர் அறிவாரா?

(ஈ) ஆமெனில், மேற்படி அதிபருக்கு நீதியை நிலைநாட்ட எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1158/ '11

12.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன கல்வி வலயத்துக்கு உரித்தான முலட்டியன கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிர்வகிக்கப்படும், மாறை/ அதபத்துகந்த கனிஷ்ட கல்லூரியின் ஆசிரியர் விடுதியின் கூரையின் மரந்தடிகள் உக்கி, கதவுகள், யன்னல்கள் மற்றும் சுவர் பெருமளவு பழுதடைந்த நிலைமைக்கு உள்ளாகி உள்ளதென்பதையும்;

(ii) அத்தகையதொரு பழுதடைந்த ஆசிரியர் விடுதி இருப்பது அப்பாடசாலை மாணவர்களின் அலுவல்களுக்கு ஆபத்தானது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆபத்தான நிலையில் காணப்படும் மேற்படி ஆசிரிர் விடுதியை அகற்றிவிட்டு, புதியதோர் ஆசிரியர் விடுதியை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், தற்போது அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(iv) ஆசிரியர் விடுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதியையும் ;

(v) நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு உத்தேசித்துள்ள திகதியையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1190/ '11

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மீள் குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒவ்வொரு இடம்பெயர் முகாமிலுமுள்ள உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் முகாம்களிலிருந்து அகற்றுவதில் உள்ள தாமதம் ஏன் என்பதனையும்;

(iii) உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களின் முகாம்களில் சிங்களவர்களா, தமிழர்களா, அல்லது முஸ்லிம்களா இருக்கிறார்கள் என்பதையும்;

(iv) மேற்படி முகாம்களில் இடம்பெயர்ந்த ஆட்களின் வயதுக் குழுக்கள் என்ன என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1210/ '11

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் திறந்து வைக்கப்பட்ட காலி- மாத்தறை தென் அதிவேக புகையிரத வீதியின் தூரம் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வீதியை அமைப்பதற்கு செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வீதியின் நிர்மாணிப்புப் பணிகளை பொறுப்பேற்ற நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியில் புகையிரதம் செல்லக்கூடிய உச்ச வேகம் மற்றும் தற்போது புகையிரதம் செல்கின்ற வேகம் தனித் தனியாக யாதென்பதையும்;

(ii) தற்போது புகையிரதம் செல்கின்ற வேகத்தின் படி அதிவேக புகையிரத வீதியின் பயண முடிவிடம் வரை புகையிரதமொன்று செல்வதற்கு எடுக்கும் நேரம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வீதி அதிவேக வீதியாக அபிவிருத்தி செய்யப்படுவதற்கு முன்னர் புகையிரதமொன்று செல்லக் கூடியதாக இருந்த வேகத்தின் படி மேற்படி பயண முடிவிடம் வரை புகையிரதமொன்று செல்வதற்கு எடுத்த நேரம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன் ?

1270/ '11

15.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

கௌரவ அப்துல் ஹலீம்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“ரன்ஜித் அலுவிஹாரே மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

பணம் தூய்தாக்கல் தடை (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 3.

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ ஆம் பிரிவின் கீழ் நிதி திட்டமிடல் அமைச்சரினால் உற்பத்தி வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 யூன் 01 ஆம் திகதிய 1708/21 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சரால் செஸ் வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 யூலை 01 ஆம் திகதிய 1712/23 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 9.

கரையோரம் பேணல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 10.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 11.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 12.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 17.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 18.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 19.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 20.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 21.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

24.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

25.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**